***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 279/2019 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | குமார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 14.08.2025.

முதல் விசாரணை

நான் தற்போது புன்னையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி முருகனை தெரியும். என் உறவினர். அசா.1 சட்டநாதன் என் அப்பா, பட்டியல் சாட்சி 2 முத்து லெட்சுமி என் அம்மா. அவர் 4 மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார். 30.03.2019 ம் ஆண்டு மாலை 05.00 மணிக்கு நானும், என் அப்பா, என் அம்மாவுடன் தண்ணீர் பாய்க்க கிணற்றுக்கு சென்றிருந்தோம். எங்கள் ஊருக்கு மெயின் ரோட்டில் உள்ள தோப்பில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்க்க சென்றோம். நாங்கள் தண்ணீர் பாய்த்து கொண்டிருந்த போது எதிரி உங்களுக்கு பங்கு இல்லை என மோட்டாரை அணைத்து விட்டார். என் அப்பா பெயரில் தான் சர்வீஸ் உள்ளது. இங்கே தண்ணீர் பாய்க்க கூடாது என சண்டைக்கு வந்தார். என் அம்மாவை எதிரி தேவுடியா என்று அசிங்கமாக பேசினார். என் அம்மாவைகம்பியை வைத்து அடிக்க வந்தார். நான் தடுக்க சென்ற போது என்னையும் இடது தோள்பட்டையில் அடித்து விட்டார். நானும், என் அப்பா, அம்மாவுடன் கடையநல்லூர் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் நானும், என் அம்மாவும் 3 நாள்கள் சிகிச்சையில் இருந்தோம். என் அம்மாவிற்கு வலது கையில் அடிபட்டிருந்தது. பின்னர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க என் அப்பா புகார் கொடுத்தார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 279/2019 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | சட்டநாதன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 14.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது புன்னையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி முருகனை தெரியும். என் உறவினர்.30.03.2019 ம் ஆண்டு மாலை 05.00 மணிக்கு நானும், என் மனைவி முத்துலெட்சுமி, என் மகன் குமார் ஆகியோர் தண்ணீர் பாய்க்க கிணற்றுக்கு சென்றிருந்தோம். எதிரி அங்கு வந்து மோட்டாரை அணைத்தார். பின்னர் எதிரி என் மனைவி முத்துலெட்சுமியை தரக்குறைவாக புண்ட மகனே, என்று அசிங்கமாக பேசி கம்பியை வைத்து என் மனைவியை வலது கையில் அடித்தார். என் மகன் குமாரை இடது கையில் அடித்தார். உடனே நான் என் மனைவியையும், மகனையும் அழைத்து கொண்டு கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். எதிரி எனக்கு கிணற்றில் பங்கு இல்லை என்று சொல்கிறார். நானும், எதிரியும் பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள். பின்னர் காவல்நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து மற்றும்

கைரேகை என்னுடையது தான் புகார் மனு நான் கொடுத்தது தான் மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என் மனைவி முத்து லெட்சுமி கடந்த 4 மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi